




dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 04 | Issue: 067 | 4 Pages | 06.10.2026 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 067 | 4 பக்கங்கள் | 06.10.2026 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்**
**பெண்மை நயவாமை நன்று**

**விளக்கம்:**
ஒருவன் அறநெறியில் நிற்காமல் அறமில்லாதவைகளைச் செய்தாலும், பிறனுக்கு உரியவளின் பெண்மையை விரும்பாமல் வாழ்தல் நல்லது

## உலக நாடுகள் பாகிஸ்தானுடன் நின்றபோது இந்தியாவுடன் நின்ற நாடு ரஷியா; ஜெய்சங்கர் புகழாரம்




டெல்லி, அக். 6

உலக நாடுகள் பாகிஸ்தானுடன் நின்றபோது இந்தியாவுடன் நின்ற நாடு ரஷியா என்று வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.முனிச் பாதுகாப்பு மாநாடு எனப்படும் சர்வதேச பாதுகாப்பு கொள்கைகள் மற்றும் வெளியுறவு விவகாரங்கள் குறித்து விவாதிக்க உலக நாடுகளின் தலைவர்கள் தலைமையில் ஆண்டுதோறும் நடைபெறும் மாநாடு ஆகும். அந்த வகையில் நடப்பு ஆண்டுக்கான முனிச் பாதுகாப்பு மாநாடு டெல்லியில் நடைபெற்று வருகிறது.இந்தியாவுடன் நின்ற நாடு ரஷியாஇந்நிலையில், இந்த மாநாட்டில் நேற்று மத்திய வெளியுறவுத்துறை ஜெய்சங்கர் பங்கேற்றார். இந்த நிகழ்ச்சியில் இந்தியா, ரஷியா இடையேயான உறவு குறித்து செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.அதற்கு பதில் அளித்த ஜெய்சங்கர், இந்தியாவும், ரஹியாவும் வரலாற்று ரீதியில் நல்ல உறவை கொண்டுள்ளன. அந்த உறவு தொடர்ந்து வலுப்பெரும். நல்ல வரலாற்றையு ம், மோசமான வரலாற்றையும் மக்கள் மறக்க கூடாது. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடான உறவை வரலாற்று அனுபவங்கள் மூலம் நிர்ணயிக்கின்றன. இந்தியாவின் இறையாண்மைக்கு ஆபத்து வந்தபோது உலக நாடுகள் பாகிஸ்தானுடன் நின்றபோது ரஷியா இந்தியாவுடன் நின்றது.இவ்வாறு அவர் கூறினார்.

## வாக்குரிமையை பறிப்பதை நியாயப்படுத்த முடியாது: சுப்ரீம் கோர்ட் நீதிபதி பரபரப்பு கருத்து



தெலுங்கானா,அக் 6

கோடிக்கணக்கான இந்திய குடிமக்களின் வாக்குரிமையை பறித்து, அவர்களை தங்கள் சொந்த நாட்டிலேயே வாக்குரிமை இல்லாத 2ம் தர குடிமக்களாக மாற்றும் எந்தவொரு நடைமுறையும் அடிப்படையிலேயே தன்னிச்சையானதாகும்என்றுஉச்சநீதிமன்ற நீதிபதி உஜ்ஜல் புயான் பேசியுள்ளார். அரசியலமைப்பின் அடிப்படையையே அது தாக்குகிறது எனவும், இந்திய அரசியலமைப்பின் கீழ் நாம் ஏற்றுக்கொண்டுள்ள அரசியலமைப்பு ஒழுங்கையே இது மறுப்பதாகும் என கூறியுள்ளார்.தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் உள்ள நல்சார் சட்டப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 19வது நல்சார்நீதிபதி பி.ஆர். சாவ்னி நினைவு நாள் தொடர்பாக நடைபெற்ற நிகழ்ச்சிகளின் நிறைவு விழாவில் நீதிபதி பூயான் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:இந்திய அரசியல் அமைப்பு குடிமக்களில் இரண்டு பிரிவினரை வைக்கவில்லை. வாக்குரிமை பெற்ற குடிமக்கள், வாக்குரிமை இல்லாத குடிமக்கள் என இருவகையாக பிரிவிக்கவில்லை. கோடிக்கணக்கான இந்திய குடிமக்களின் வாக்குரிமையைபறித்து,அவர்களைதங்கள்சொந்தநாட்டிலேயேவாக்குரிமை இல்லாத 2ம் தர குடிமக்களாக மாற்றும் எந்தவொரு நடைமுறையும் அடிப்படையிலேயே தன்னிச்சையானதாகும்.எத்தகைய மாற்று வாதங்களாலும் அதை நியாயப்படுத்த முடியாது. அரசியலமைப்பின் அடிப்படையையே அது தாக்குகிறது. அரசியல் அமைப்பின் 14 வது பிரிவு அனைவருக்கு சமத்துவ உரிமையை உறுதி செய்கிறது. சட்டப்பிரிவு 26 வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்குகிறது. எனவே, அத்தகைய நடவடிக்கைகள் அவற்றுக்கு எதிரானது. இந்திய அரசியலமைப்பின் கீழ் நாம் ஏற்றுக்கொண்டுள்ள அரசியலமைப்பு ஒழுங்கையே இது மறுப்பதாகும் என்று கூட நான் சொல்வேன்.ஒரு வாக்காளரின் பெயர் வாக்காளர் பட்டியலில் ஒருமுறை இடம்பெற்றுவிட்டால், அந்த நபர் இறந்தவர் என்பதைத் தவிர, உரிய அறிவிப்பு வழங்கி, அவரது தரப்பைக் கேட்காமல் பெயரை நீக்க முடியாது. இந்திய குடிமகனின் வாக்குரிமையையோ அல்லது வாக்காளர் பட்டியலில் இடம்பெறும் உரிமையையோ அவரது குடியுரிமையிலிருந்து பிரிக்க முடியாது. அவ்வாறு பிரிப்பது உடலில் இருந்து ஆன்மாவை அகற்றுவதற்கு சமமாகும்" என்று கூறினார்.

## பிளைதுபாய் விமான சம்பவத்தில் எங்களுக்கு எந்த தொடர்பும் கிடையாது: ஈரான் திட்டவட்டம்



டெஹ்ரான், அக். 6

துபாயில் இருந்து இஸ்ரேலின் டெல் அவிவ் நகருக்கு சென்றப்ளைதுபாய் விமானத்தில் நடந்த சம்பவத்துக்கும் ஈரானுக்கும் தொடர்பு இருப்பதாக கூறப்படுவதை ஈரான் திட்டவட்டமாக மறுத்துள்ளது. போலியாக உருவாக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையிலேயே இதுபோன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது. இதுகுறித்து ஈரான் வெளியுறவுஅமைச்சகசெய்தித்தொடர்பாளர்இஸ்மாயில்பகாயிகூறியதாவது: கடந்த 7 மாதங்களாக உலகம் நேரடியாக பார்த்து வரும் அனுபவத்தைத்தான் இது மீண்டும் நினைவுபடுத்துகிறது. ஈரான் மீது போலியாக உருவாக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையிலேயே குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இது ஏற்கனவே பலமுறை பயன்படுத்தப்பட்ட பழைய உத்தியாகும்" என்று தெரிவித்துள்ளது.

துபாயில் இருந்து டெல் அவிவ் நகருக்கு கடந்த செப்டம்பர் 30ந் தேதி சென்ற பிளைதுபாய் விமானம் புறப்பட்டது. இந்த விமானம் நடுவானில் சென்றுகொண்டிருந்தபோது, ஓமன் நாட்டைச் சேர்ந்த இணை விமானி ஹமாம் அல்ஹம்மாமி, விமானி ஸ்மித் மச்சாரை தாக்கி விமானத்தை தனது கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவந்து,அதைவிபத்தில்சிக்கவைக்கசதித்திட்டம் தீட்டியதாக கூறப்படுகிறது. ஓமன் நாட்டை சேர்ந்த அந்த விமானியிடம் தற்போது ஐக்கிய அரபு அமீரக அதிகாரிகள் விசாரித்து வருகிறார்கள்.

ஓமன் விமானி 'பயங்கரவாத தாக்குதலை' நடத்த முயன்றதாக அந்நாட்டு அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அதேநேரத்தில், இணை விமானி ஹமாம் அல்ஹம்மாமியின் பின்னணி, ஆஸ்திரேலியாவுடனான தொடர்பு மற்றும் அவர் ப்ளைதுபாய் விமானக் குழுவில் இடம்பெற்றது எப்படி என்பது குறித்து ஆஸ்திரேலியா மற்றும் இஸ்ரேல் அதிகாரிகளும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தமிழக மீனவர்கள் 20 பேர் கைது; வெளியுறவுத்துறை மந்திரிக்கு முதல்அமைச்சர் விஜய் கடிதம்

சென்னை, அக். 6

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 20 மீனவர்களையும், 270 மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவிக்கத்தேவையானநடவடிக்கை எடுக்கக்கோரி, மத்திய வெளியுறவுத் துறை மந்திரி ஜெய்சங்கருக்கு முதல் அமைச்சர் விஜய் கடிதம் எழுதி உள்ளார்.

மத்திய வெளியுறவுத் துறை மந்திரி டாக்டர்எஸ்.ஜெய்சங்கர்அவர்களுக்கு முதல்அமைச்சர் எழுதிய கடிதத்தில், தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது குறித்து, மத்திய வெளியுறவுத் துறை மந்திரி தனிக்கவனம் செலுத்திட வேண்டும்.

கடந்த 3.10.2026 அன்று, ராமேஸ்வரத்தைச் சேர்ந்த ஒன்பது மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்ததோடு, அவர்களின் விசைப்படகையும் (பதிவு எண்: INDTN10MM0457) பறிமுதல் செய்துள்ளனர். இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெறுவது தமிழ்நாட்டின் கடலோர மீனவச் சமூகத்தினரிடையே பெரும் கவலையையும், அச்சத்தையும் ஏற்படுத்தி வருகிறது.

மேலும், ராமநாதபுரம் மற்றும் அதனை ஒட்டியுள்ள கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள், பாரம்பரியமாகவே பாக் ஜலசந்தி பகுதியில் மீன்பிடித் தொழிலைச் செய்து தங்கள் வாழ்வாதாரத்தைப் பேணி வருகிறார்கள், குறிப்பாக, மீன்பிடிப்படகுகளே அவர்களின் முதன்மையான வாழ்வாதாரமாக விளங்குவதால், மீனவர்கள் கைது செய்யப்படுவதும், அவர்களின் படகுகள்பறிமுதல்செய்யப்படுவதும் அவர்களது குடும்பங்களுக்குப் பெருந்துயரத்தையும், பொருளாதார




நெருக்கடியையும் ஏற்படுத்துகிறது.

கைது செய்யப்பட்ட மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விரைந்து மீட்பது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

இத்தகைய சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெறுவது, இரு நாடுகளுக்கிடையேயான பேச்சுவார்த்தைக்கான தற்போதைய அதிகாரப்பூர்வ அமைப்பை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளது. இதற்கென அமைக்கப்பட்டுள்ள மீன்பிடி விவகாரங்கள் தொடர்பான இந்தியா இலங்கை கூட்டுப் பணிக்குழுவை *(IndiaSri Lanka Joint Working Group on Fisheries)* உரியமுறையில்புனரமைத்து, அதன்கூட்டத்தைவிரைவாகக்கூட்டி, இருநாட்டு மீனவர்களின் பிரச்சனைகளுக்கு ஆக்கப்பூர்வமான தீர்வுகளைக் காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே, இவ்விவகாரத்தை இலங்கை அரசிடம் உடனடியாகக் கொண்டு சென்று, தற்போது இலங்கையில் காவலில் வைக்கப்பட்டுள்ள 20 தமிழ்நாட்டு மீனவர்களை விரைவாக விடுதலை செய்து தாயகம் அழைத்து வரவும், பறிமுதல் செய்யப்பட்டுள்ள 270 மீன்பிடிப் படகுகளை மீட்டுத் தரவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜப்பானில் நடைபெற்ற 20 ஆவதுஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற ஸ்குவாஷ் வீரர், வீராங்கனைகளுக்கு பாராட்டு விழா

ஜப்பானில் நடைபெற்ற 20 ஆவதுஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற ஸ்குவாஷ் வீரர், வீராங்கனைகளுக்கு பாராட்டு விழா சென்னை நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு அரசு மாண்புமிகு பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். ஸ்குவாஷ் போட்டியில் வெண்கலப் பதக்கங்கள் வென்ற வேலவன் செந்தில் குமார்,ஜோஷ்னா சின்னப்பா,சமீனா ரியாஸ்,ஆடவர் 4★400 மீ தொடர் ஓட்டப் போட்டியில் வெண்கலம் வென்ற வீரர் ரமேஷ் ராஜேஷ் ஆகியோருக்கு அமைச்சர் பாராட்டு தெரிவித்து பேசினார்.அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேச்சு:ஆசியப் போட்டியில் பதக்கங்கள் பெற்றவர்கள் தான் நமக்கு முன்னுதாரணம். விளையாட்டுத் துறையில் நிறைய திட்டங்கள் செயல்படுத்த உள்ளோம்.விளையாட்டு




வீரர்களுக்கு குளிர்சாதன வசதியுடன் கூடிய விடுதிகள் அனைத்து மாவட்டங்களிலும் தயாராகி வருகின்றது.ஆசியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு முதலமைச்சருடன் விருந்து ஏற்பாடு செய்யப்பட உள்ளது. அதில் விடுதியில் உள்ள மாணவர்களும் கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்ய உள்ளோம்.தமிழ்நாட்டில் குறைந்தது 4 வருடத்திற்குள் அனைத்து *sports city* களும் உருவாகிவிடும்.

8 வயது முதல் விளையாடி, ஒலிம்பிக் பதக்கம் வெல்லும் வரை தமிழ்நாடு அரசு உங்களுக்கு உறுதுணையாக இருக்கும். விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகைகளைப் போன்று, அதே தொகையை பயிற்சியாளர்களுக்கும் வழங்க முதலமைச்சரிடம் கோரிக்கை வைக்க உள்ளோம்; முதலமைச்சர் நிச்சயம் அதை ஏற்பார்.நம் திறமைகளை அறிந்து,அதை வளர்த்து, போட்டிகளில் பங்கேற்று, வெற்றிகளைப் பெற வேண்டும்.மாணவர்கள் யூடியூப் இல் படங்கள் பார்ப்பதை விட, விளையாட்டை மேம்படுத்த தேவையான விஷயங்களைபார்த்து,திறனைவளர்த்துக்கொள்ள வேண்டும்.இந்தியாமற்றும்நம் மாநிலமே ஆசியப் போட்டிகளில் வெற்றவர்களை கண்டு பெருமை கொள்ளும் தருணம் இது.

## போதை விழிப்புணர்வு குறித்து தொடர்ந்து 36 விருதுகள் பெற்ற நான்காம் வகுப்பு மாணவன்....

செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் அருகே கோட்ட புஞ்சை கிராமத்தை சேர்ந்த முருகன் மற்றும் முல்லைவாணி தம்பதியின் மகன் நான்காம் வகுப்பு பயின்று வரும் தக்ஷன்என்பவர்போதைஒழிப்புகுறித்துதொடர்ந்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தி வருகிறார். இதுவரை தொடர்ந்து 35விருதுகளை பெற்ற தக்ஷன் 36வது விருதாக சென்னையில் நடைபெற்ற குளோபல் அர்ச்சுவல் கவுன்சில் நடத்திய விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்டு விருதினை பெற்றுள்ளார். இதேபோல சின்னக்கைப்பாக்கம் பகுதியை சேர்ந்த ராமமூர்த்தி ரஞ்சிதா தம்பதியின் மகன் எட்டாம் வகுப்பு படிக்கும் சுஜித் என்கிற மாணவனும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விருதினை பெற்றுவந்துள்ளார்.

இச்சாதனை சிறுவர்களுக்கு பயிற்சி அளித்து உடனிருந்து விருது வாங்கிக் கொடுத்த ஆசிரியர் ராம்குமார் மற்றும் மாணவர்கள் தக்ஷன், சுஜித் ஆகியோரை பாராட்டும் விதமாக ரீலைப் பவுண்டேஷன் நிறுவனர் டாக்டர் சுரேஷ். தமிழ்நாடு மனித உரிமைகள் சங்க கூட்டமைப்பு தலைவர் சமூக ஆர்வலர் சிங்கை கணேஷ் ஆகியோர் நினைவு பரிசாக தக்ஷன் மற்றும் சுஜித் ஆகியோருக்கு டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் சிலையும் ,தந்தை பெரியார் சிலையும் பரிசாக வழங்கி சால்வை அணிவித்து அவர்களை பாராட்டி தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.




## பெண்கள் மீதான தரம் தாழ்ந்த விமர்சனத்தை நிறுத்தாவிட்டால் மு.க.ஸ்டாலின் மற்றும் உதயநிதி ஸ்டாலின் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுப்போம்: அமைச்சர் பேச்சு

பெண்கள் மீதான தரம் தாழ்ந்த விமர்சனத்தை நிறுத்தாவிட்டால் மு.க.ஸ்டாலின் மற்றும் உதயநிதி ஸ்டாலின் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுப்போம் என அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.



தாராபுரம் தவெக வேட்பாளர் சத்யபாமாவை உருவகேலி செய்யும் வகையில் பேசியதாக திமுகதலைவர்மு.க.ஸ்டாலின் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் புகார் மனு அளித்துள்ளார். அதன்பின் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்மீதுஎங்களுக்கு மரியாதை இருப்பதாகவும், ஆனால்கடந்தஐந்தாண்டுகளில் இல்லாத அளவிற்கு பெண்களை தரம் தாழ்ந்து பேசி வருவதாகவும் கூறினார். மு.க.ஸ்டாலின் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி தற்போது தேர்தல் அதிகாரியிடம் புகார் அளித்துள்ள நிலையில்,

அடுத்து கிரிமினல் புகார் அளிக்கவும் இருப்பதாகவும் ஆதவ் அர்ஜுனா தெரிவித்தார். திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், அவரது மகன் உதயநிதிஸ்டாலின் ஆகியோர் பெண்கள் மீதான விமர்சனத்தை தொடர்ந்தால் அவர்கள் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுப்போம் எனவும் ஆதவ் அர்ஜுனா எச்சரிக்கை விடுத்தார். மேலும் புதிய தலைமைச் செயலகம் கட்டுவது தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள குழு பட்டினம்பாக்கம் பகுதி மீனவர்களை சந்தித்து அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்தபின்னர் தமிழக அரசின் நிலைப்பாடு தெரிவிக்கப்படும் எனவும் ஆதவ் அர்ஜுனா விளக்கமளித்தார்

# மரக்கடை சந்திப்பில் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

கோவை, அக். 6

மரக்கடை சந்திப்பில் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தலைக்கவசம், இருக்கை பட்டை, அலைபேசி பயன்பாடு மற்றும் சிக்னல் விதிமீறல் குறித்து பொதுமக்களுக்குவிழிப்புணர்வுஏற்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் B3 வெரைட்டி ஹால் போக்குவரத்தும் பிரிவு SSI ரஞ்சன், HC சந்தோஷ் மற்றும் PC 3190 அழகர்சாமி ஆகியோர் பங்கேற்று, சாலை விதிகளைப் பின்பற்றுவதன் அவசியம் குறித்து மக்களுக்கு அறிவுரை வழங்கினர். மக்களின் பாதுகாப்பே முக்கியம் என அதிகாரிகள் வலியுறுத்தினர். சாலைப் பாதுகரப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் போக்குவரத்துப் போலீசார் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு பிரசுரங்களை வழங்கினர்.




# பொது வாழ்வில் இளைஞர்களுக்கு ஆர்வம்

சென்னை, அக். 6




இங்கிலாந்து நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளரான ஜார்ஜ் ஆர்வெல் எழுதிய வரிகள் இன்றளவும் உலகம் முழுவதும் பேசப்படுகிறது. ஒவ்வொரு தலைமுறையும் தாங்கள்அதற்குமுந்தையதலைமுறையைவிட அறிவாற்றல் மிகுந்தவர்கள், தங்களுக்கு பிறகு வரும் தலைமுறையைவிட ஞானவான்கள் என்று கற்பனை செய்கிறார்கள் என்று எழுதியிருந்தார். எப்போதுமே இளைஞர்சக்திக்குத்தான் ஆற்றலும், வீரமும் அதிகமாக இருக்கிறது. சுதந்திரப் போராட்டத்தின்போதும் இளம் வீரர்களின் வேகம்தான் மிக உச்சத்தில் இருந்தது. பெருந்தலைவர் காமராஜர், கொடிகாத்த குமரன், கலெக்டர் ஆஷ் துரையைச் சுட்டுக்கொன்ற வாஞ்சிநாதன் என்று ஒரு பெரிய பட்டியலையே அந்த இளைஞர் சமுதாயத்தில் இருந்து சொல்லிக்கொண்டே போகலாம்.தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் 1967ம் ஆண்டு வரை காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. மாணவர்கள் நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டம் காங்கிரசை ஆட்சியில் இருந்து இறக்கிவிட்டு அந்த ஆண்டில் தி.மு.க.வும். தொடர்ந்து அ.தி.மு.க.வும் மாறி மாறி ஆட்சியில் அமர வைத்தது. இந்த ஆண்டு நடந்த தேர்தலில் த.வெ.க. வெற்றி பெற்று முதல்அமைச்சர் விஜய் தலைமையிலான அரசு அமைந்ததற்கும், அவருக்குப் பின்னால் 'ஜென்சி' மற்றும் 'ஜென்ஆல்பா' இளைஞர் சமுதாயம் பக்கபலமாக நின்றதுதான் காரணம் என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இவ்வளவு ஏன் 2024ம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் பாஜக வெற்றி பெற்றதற்கு, பிரதமர் மோடிக்குக் கிடைத்த இளைஞர் சமுதாயத்தின் ஆதரவுதான் என்று சி.எஸ்.டி. எஸ்.லோக்நிதியின் தேர்தலுக்குப் பிந்தைய ஆய்வு தெரிவிக்கிறது. அதாவது பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 46 சதவீத ஓட்டுகள் 18 வயதில் இருந்து 25 வயது வரையில் உள்ளவர்களிடம் இருந்து கிடைத்திருக்கிறது. ஆனால் 56 வயதுக்கு மேற்பட்டவர்களிடம் இருந்து 41 சதவீத வாக்குகள்தான் அறுவடை செய்யப்பட்டிருக்கிறது. தேர்தலில் மட்டுமல்லாமல் சமூக நீதி முயற்சிகளிலும் 'ஜென்சி' பங்குதான் குறிப்பிடத்தக்க அளவில் இருக்கிறது. இதுமட்டுமல்லாமல் இன்றைய இளைஞர்களுக்கு பொதுவாழ்வில் மிக அதிக ஆர்வம் இருப்பதை சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் சட்டசபையிலேயே தெரிவித்து இருக்கிறார். நடந்து முடிந்த சட்டசபைக் கூட்டத்தொடரின் நிறைவு நாளில் உரையாற்றிய ஜே.சி.டி.பிரபாகர், சட்டசபை நிகழ்ச்சிகளைக் காண இளைஞர்களுக்கு அதிக ஆர்வம் இருக்கிறது. நிகழ்ச்சிகள் இப்போது முதல் முறையாக நேரலையில் ஒளிபரப்பப்படுகிறது. டெலிவிஷனில் பார்த்துவிடலாம் என்றாலும், நேரடியாகப் பார்க்க இதுவரையில் இல்லாத அளவுக்கு அதிகம் பேர் சட்டசபைக்கு வந்திருக்கின்றனர். சட்டசபை நடந்த 28 நாட்களில் மட்டும் 32 ஆயிரத்து 55 பேர் நேரடியாக வந்து, அவை நடவடிக்கைகளை பார்த்துள்ளனர்.இதில் பெரும்பாலானோர் இளைஞர்கள். மேல்நிலைப் பள்ளிகளில் படிப்பவர்கள், கல்லூரி மாணவர்கள், இளைஞர்களுக்கு சட்டசபை நிகழ்வுகளை நேரில் பார்க்கவேண்டும் என்ற ஆர்வம் அதிகரித்துள்ளது. பொது வாழ்வில் ஈடுபடவேண்டும் என்ற ஆர்வம்தான் இதற்கு முக்கிய காரணம். சராசரியாக 20 பள்ளி, கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமே ஆண்டுதோறும் இதுவரை சட்டசபை நிகழ்வுகளை நேரில் பார்க்க வந்த நிலையில், இந்த முறை 76 பள்ளி, கல்லூரிகளை சேர்ந்த மாணவர்கள் வந்துள்ளனர்என்றுஜே.சி.டி.பிரபாகர்அறிவித்திருக்கிறார். ஆக இன்றைய இளைஞர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் அரசியலிலும், பொது வாழ்விலும் ஏற்பட்டுள்ள ஆர்வத்தைப் பார்க்கும்போது நாளைய சமுதாயம் மிகவும் பிரகாசமாக தெரிகிறது.

# பெண்கள் தொழில் தொடங்க ரூ.5 கோடி வரை கடன் உதவி: தமிழக அரசு வழிகாட்டுதலை வெளியிட்டது

சென்னை, அக் 6

வெற்றி மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பெண்கள் தொழில் தொடங்க ரூ.5 கோடி வரை கடன் உதவி வழங்கப்படுகிறது. அதற்கான வழிகாட்டுதல்களை தமிழக அரசு வகுத்துள்ளது.234 தொகுதிகள்தமிழகஅரசுபெண்தொழில்முனைவோர்களை உருவாக்கும்விதமாகவெற்றிமகளிர்தொழில்முனைவோர் மேம்பாட்டுத்திட்டத்தை அறிவித்துள்ளது. இந்தத் திட்டம் குறித்து அமைச்சர் கீர்த்தனா கூறியதாவது:தமிழ்நாட்டில் சொந்தமாகத் தொழில் தொடங்க வேண்டும் என்ற கனவோடு, சரியான வாய்ப்புக்காகக் காத்திருக்கும் ஒவ்வொரு பெண்ணுக்கும் இது உங்களுக்கான நேரம். முதல்அமைச்சர் விஜய் தலைமையில், பெண்களைத் தொழில்முனைவோராகமாற்றவும்,அவர்கள்சொந்தமாகத் தொழில் தொடங்கவும் நாங்கள் மற்றொரு முக்கிய முன்னெடுப்பை எடுத்துள்ளோம். 'வெற்றி மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்' கீழ், தகுதியான பெண்களுக்கு ரூ.10 லட்சம் முதல் ரூ.5 கோடி வரை கடனுதவி வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை தமிழ்நாட்டின் 234 தொகுதிகளுக்கும் கொண்டு செல்கிறோம்.நமது கனவுகளைத் தொழில்களாக மாற்றுவோம்ஒவ்வொரு தொகுதியிலும் தொழில் தொடங்க ஆர்வமுள்

ள 10 திறமையான பெண்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் விண்ணப்பங்களை எங்கள் அலுவலகத்திற்கு அனுப்புமாறு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களிடமும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பங்கள் தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படும் பெண்களுக்கு இத்திட்டத்தின் கீழ் முழு ஆதரவு வழங்கப்படும். பெண்கள் அதிகாரம் பெற்று பொருளாதாரத்தில் முன்னேறும்போதுதான் தமிழ்நாடு உண்மையான வளர்ச்சியை அடையும். நமது கனவுகளைத் தொழில்களாக மாற்றுவோம். அந்தத் தொழில்களை நமக்கான சிறந்த வாய்ப்புகளாக மாற்றுவோம்.இவ்வாறு அவர் கூறினார்.வழிகாட்டுதல்கள்இதற்கிடையே இந்தத் திட்டத்தின் தகுதிகள் குறித்து தமிழக அரசு வழிகாட்டுதல்களை வகுத்துள்ளது. அதன் விவரம் வருமாறு:குறிக்கோள்உற்பத்திமற்றும்சேவைத்துறைகளில் புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், ஏற்கனவே உள்ள தொழிற்சாலைகளை விரிவுபடுத்துவதற்கும், நவீனமயமாக்குவதற்கும் மகளிர் தொழில் முனைவோருக்கானசிறப்புநிதியுதவித்திட்டம்.திட்டத்தின் நோக்கம்தொழிற்சாலைகளுக்கு தேவையான நிலம் வாங்குவதற்கும், திட்டம்

சார்ந்த கட்டிடங்களைக் கட்டுவதற்கும், இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட புதிய



எந்திரங்கள் மற்றும் சாதனங்களை வாங்குவதற்கும் இந்த நிதியுதவி வழங்கப்படும்.தகுதிகள்மகளிர் தொழில் முனைவோரால் தொடங்கப்பட்டு குறைந்தபட்சம் 51 சதவீத பங்குரிமையைக் கொண்டுள்ள தனியுரிமை ஒருநபர் நிறுவனங்கள், கூட்

டாண்மை நிறுவனங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கூட்டாண்மை நிறுவனங்கள், தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள். தொழில்பயிற்சிதொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மூலம் முதன்முறை தொழில் முனைவோருக்கு தொழில்பயிற்சி அளிக்கப்படும். எவ்வளவு கடன் வழங்கப்படும்?குறைந்தபட்சம் ரூ.10 லட்சம் முதல் ரூ.5 கோடி.பயனாளர்களின் பங்களிப்புத்தொகைபுதிய நிறுவனங்கள் திட்டச் செலவில் 20 சதவீதம், ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனங்கள் திட்டச் செலவில் 15 சதவீதம்.கடன் வட்டி விகிதம்தற்போது ஆண்டுக்கு 9.95 சதவீதம்கடனைத் திருப்பிச் செலுத்தும் முறைகாலம்மாதத் தவணையில் கடனை 9 ஆண்டுகள் வரை திருப்பிச் செலுத்தலாம். அதில் 2 ஆண்டுகள் வரையிலான

தவணை ஒத்திவைப்புக் காலமும் அடங்கும்.சிபில் மதிப்பெண்சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான தரவரிசை 7க்குள் இருக்க வேண்டும். தனிநபர் 600க்கு மேல் இருக்க வேண்டும்.பிணையச் சொத்துபுதிய மற்றும் 3 ஆண்டுகளுக்கும் குறைவாகவே செயல்பட்டு வரும் தொழில் நிறுவனங்களுக்கு அசையாச்சொத்து வடிவில் கடன் தொகையில் 40 சதவீதம் இருக்க வேண்டும். 3 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வரும் தொழில் நிறுவனங்களுக்கு கடன் தொகையில் 20 சதவீதம் இருக்க வேண்டும்.ஆய்வுக் கட்டணம்இந்தத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் கடன்களுக்கு ஆய்வுக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படாது.இவ்வாறு வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டுள்ளன.

# எல்.என்.ஜி.யில் இயங்கும் ரெயில் அறிமுகப்படுத்தப்பட்டது ஏன்? ரெயில்வே அதிகாரிகள் விளக்கம்

சென்னை, அக்.6

மின்மயமாக்கல் 100 சதவீதத்தை நெருங்கிய நிலையில் எல்.என்.ஜி.யில் இயங்கும் ரெயில் அறிமுகப்படுத்தப்பட்டதுஏன்?என்பதுகுறித்துரெயில்வே அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.இரட்டை எரிபொருள்மின்மயமாக்கல் பணிகள் ஏறக்குறைய முழுமையடைந்துள்ள நிலையில், திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்.என்.ஜி.) மற்றும் டீசல் ஆகிய இரண்டிலும் இயங்கும் புதிய ரெயிலை ரெயில்வே அறிமுகப்படுத்தியது. குஜராத் மாநிலம் சபர்மதி ரெயில் நிலையத்தில் இருந்து 8 பெட்டிகளைக் கொண்ட குளிர்சாதன வசதி இல்லாத இந்த ரெயில் சமீபத்தில் தனது சேவையை தொடங்கியது.இது முற்றிலும் புதிய ரெயில் அல்ல. ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள டீசல், மின்சார ரெயிலில் மாற்றங்கள் செய்யப்பட்டு, இரட்டை எரிபொருளில் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது.இந்தியரெயில்வேயில்பெரும்பாலானரெயில்கள் மின்சார என்ஜின்கள் மூலம் இயக்கப்படுகின்றன. மின்மயமாக்கப்படாத வழித்தடங்களில் டீசல் என்ஜின்கள் பயன்படுத்தப்படுகின்றன. டீசலுக்கு மாற்றாக எல்.என்.ஜி. பயன்படுத்துவதன் மூலம் மாசு வெளியேற்றத்தை குறைக்க முடியும். இதனால், நாடு முழுவதும் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள டீசல் மின்சார ரெயில்களை எல்.என்.ஜி.யில் இயங்கும் வகையில் படிப்படியாக மாற்றுவதற்கு ரெயில்வே திட்டமிட்டு உள்ளது.தேவை ஏன்?ஆமதாபாத் ரெயில்வே கோட்டத்தில் டீசல் என்ஜினை எல்.என்.ஜி. யில்இயங்கும்வகையில்மேற்கொள்ளப்பட்டமாற்றத்துக்கு ரூ.1.86 கோடி செலவிடப்பட்டு உள்ளது. ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள ரெயில்களை மாற்றியமைப்பதன் மூலம், புதிய ரெயில்களை வாங்குவதற்கான செலவைக் குறைக்க முடியும். மேலும் ரெயில்களை இரட்டை எரிபொருளில் இயக்குவது, ரெயில்வேயின் எரிபொருள் செலவை குறைப்பதுடன், சுற்றுச்சூழல் பாதிப்பையும் கட்டுப்படுத்துவதற்கு உதவும்.இந்திய ரெயில்வேயின் வழித்தடங்களில் 99.6 சதவீதம் மின்மயமாக்கல் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், எல்.என்.ஜி. ரெயில்களின் தேவை குறித்து அதிகாரிகள் கூறும்போது, 'மின்மயமாக்கப்படாத வழித்தடங்கள், குறைந்த போக்குவரத்து கொண்ட கிளைப்பாதைகள் மற்றும் மின்சார வசதி இல்லாத பகுதிகளில் எல்.என்.ஜி. ரெயில்களை பயன்படுத்த முடியும். ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள டீசல் என்ஜின்களை உடனடியாக கைவிடாமல், அவற்றை இரட்டை எரிபொருளில் இயக்குவதன் மூலம் எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்கவும், ரெயில்வே சேவைகளின் செயல்திறனை அதிகரிக்கவும் முடியும் என்றனர்.




# ஓரினச்சேர்க்கைக்கு அழைத்து தனியார் பள்ளி ஆசிரியரை மிரட்டி ரூ.99 ஆயிரம் பறிப்பு

கோயம்புத்தூர், அக். 6



ஓரினச்சேர்க்கைக்கு அழைத்து தனியார் பள்ளி ஆசிரியரை மிரட்டி ரூ.99 ஆயிரம் பறித்த 5 பேரை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.கோவையை அடுத்த வடவள்ளி பகுதியை சேர்ந்த 35 வயது நபர் ஒருவர் தனியார் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறார். இவருக்கு செல்போன் செயலி மூலம் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த கவியரசன் (22 வயது) என்பவர் அறிமுகமானார். அவர் மூலம் சண்முகராஜ் (25 வயது), வினோத்குமார் (32 வயது), முத்துகுமார் (23 வயது), முகேஷ்குமார் (20 வயது) ஆகியோரும் அந்த ஆசிரியருக்கு அறிமுகமாகியுள்ளனர். இதையடுத்து அவர்கள் செயலி மூலம் அடிக்கடி பேசிக்கொண்டனர். மேலும் செல்போன் எண்களை பறிமாறி பேசி வந்தனர். அப்போது அவர்களிடம், ஆசிரியர் ஓரினச்சேர்க்கை தொடர்பாக பேசியதாக கூறப்படுகிறது. இதையடுத்து அவர்கள், கோவையில் இருப்பதாகவும், நீங்கள் வடவள்ளி அருகே உள்ள இடத்துக்கு வந்தால் ஓரினச்சேர்க்கையில் ஈடுபடலாம் என்றும் ஆசிரியரிடம் கூறினர்.அதை நம்பி அவர் அங்கு சென்றுள்ளார். அப்போது அங்கிருந்த 5 பேரும் ஆசிரியரிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டு இருந்தனர். பின்னர் அவர்கள் 5 பேரும் திடீரென்று ஆசிரியரை மிரட்டி பணம் கேட்டு உள்ளனர். அதற்கு அவர் தன்னிடம் பணம் இல்லை என்று கூறியுள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த அவர்கள் 5 பேரும் சேர்ந்து ஆசிரியரிடம் இருந்த செல்போனை பறித்து ஜிபே மூலம் ரூ.99 ஆயிரத்தை தங்களின் வங்கி கணக்குக்கு அனுப்பி உள்ளனர்.பின்னர் இதுகுறித்து வெளியே சொன்னால் கொன்று விடுவதாக மிரட்டிவிட்டு தப்பிச்சென்றனர். இதனால் அதிர்ச்சி அடைந்த ஆசிரியர் அளித்த புகாரின் பேரில் வடவள்ளி போலீசார் வழக்குப்பதிவு செய்து, 5 பேரையும் வலைவீசி தேடி வருகின்றனர்.

# சென்னை ரெயில்வே கோட்டத்தில் 16 சுரங்கப்பாதை அமைக்கும் பணிகள் நிறைவு

சென்னை, அக். 6

சென்னை ரெயில்வே கோட்டத்தில் 16 சுரங்கப்பாதைஅமைக்கும்பணிகள்நிறைவுபெற்றது. இது தொடர்பாக, தெற்கு ரெயில்வே சென்னை கோட்டம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:சுரங்கப்பாதைகள்ரெயில்வே லெவல்கிராசிங்கேட்டுகளில்நடக்கும்விபத்துகளைத் தவிர்க்கும் வகையில் கடந்த 202526 நிதியாண்டில், சென்னை கோட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 11 ரெயில்வே கேட்டுகள் அகற்றப்பட்டு, அங்கு சுரங்கப்பாதைகள்வெற்றிகரமாககட்டிமுடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டன.நடப்புபு நிதியாண்டில் (202627) செப்டம்பர் மாதம் வரை மேலும் 5 ரெயில்வே கேட்டுகள் நீக்கப்பட்டு சுரங்கப்பாதைகளாக மாற்றப்பட்டுள்ளன. இதன் மூலம் இதுவரை மொத்தம் 16 சுரங்கப்பாதைகள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த சுரங்கப்பாதைகள் ஒவ்வொன்றும் தலா சுமார் ரூ.8 கோடி மதிப்பீட்டில் கட்டப்ப ட்டுள்ளது.இதேபோல, அரக் கோணம் ஜோலார்பேட்டை வழித்தடத்தில் திருமணிலத்தேரி சாலை, சென்னை சென்டிரல்அரக்கோணம் வழித்தடத்தில் திருவள்ளூர் மற்றும் கடம்பத்தூர் நிலையங்களுக்கு இடையே அதிகத்தூரிலும், அதே வழித்தடத்தில்திருவாலங்காடு மற்றும்அரக்கோணம் ரெயில் நிலையங்களுக்கு இடையே மோசூர் சாலையிலும் சுரங்கப்பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# விவசாயிகள் கடனாளிகளாக வாழும் நிலை மாற வேண்டும் இறுதிக்கட்ட பிரசாரத்தில் சீமான் பேச்சு

திருப்பூர், அக.6



தாராபுரத்தில் இறுதிக்கட்ட பிரசாரம் செய்த சீமான், 'விவசாயிகள் கடனாளிகளாக வாழும் நிலை மாற வேண்டும்' என்று கூறினார்.இறுதிக்கட்ட பிரசாரம்திருப்பூர் மாவட்டம் தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் நாளை நடக்கிறது. இதையொட்டி நேற்று மாலையுடன் அனல் பறந்த பிரசாரம் முடிந்தது. அதன்படி, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், வேட்பாளர் கார்த்திகாவை ஆதரித்து இறுதிக்கட்ட பிரசாரம் செய்தார். தாராபுரத்தில் அமைக்கப்பட்டு இருந்த பிரசார மேடையில் சீமான் பேசும்போது கூறியதாவது:ஒரு சிறந்த சமூகத்தை கட்டமைக்க கல்வியும் அறிவும்தான் அடிப்படை தேவையாகும். உலகிலேயே தலைசிறந்த கல்வியை இந்நாட்டு மக்களுக்கு இலவசமாகவும் தரமாகவும் வழங்க வேண்டியது அரசின் தலையாய கடமை. பின்லாந்து, சிங்கப்பூர் போன்ற உலக நாடுகளின் கல்வி தரத்திற்கும், டெல்லியில் உருவாக்கப்பட்டுள்ள கல்வி கட்டமைப்புக்கும் ஈடாகத் தமிழகத்தில் கல்வித்தரம் உயர்த்தப்படவேண்டும்.கேள்விஎழுப்பவேண்டும்இன்று கல்வி, மருத்துவம், குடிநீர், போக்குவரத்து, மின்சாரம் என அனைத்துமே தனியார் மயமாக்கப்பட்டு வருகின்றன. எல்லாவற்றையும் தனியார் முதலாளிகளே வழங்குவார்கள் என்றால், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசின் வேலை என்ன என்ற கேள்வியை மக்கள் எழுப்ப வேண்டும். விவசாயிகள் தொடர்ந்து கடனாளிகளாகவே வாழும் அவல நிலை மாற வேண்டும். பிற தொழில்களில் ஈடுபடுவோர் தங்கள் பொருட்களுக்கான விலையை தாங்களே தீர்மானிப்பது போல், விவசாயியும் தான் விளைவிக்கும் பொருட்களுக்கு தானே விலை நிர்ணயம் செய்யும் அதிகாரம் உருவாக்கப்பட வேண்டும். இதற்காக வேளாண்மை துறைக்கு கீழ் சிறப்பு அமைப்பும், பொருட்கள் வீணாகாமல் இருக்க மாநிலம் முழுவதும் குளிரூட்டப்பட்ட நவீன சேமிப்புக் கிடங்குகளும் அமைக்கப்படும்.நீரும், உணவும் இன்றி வாழ முடியாதுமக்கள் கார், செல்போன் போன்ற வசதிகள் இல்லாமல் கூட வாழ்ந்து விடலாம், ஆனால் நீரும், உணவும் இன்றி வாழ முடியாது. எனவே, மக்களின் அடிப்படை தேவைகளான கல்வி, மருத்துவம், விவசாயம் ஆகியவற்றைப் பாதுகாத்து, இந்த நிர்வாக அமைப்பை முற்றிலும்மாற்றியமைக்கநாம்தமிழர்கட்சிக்குவாக்களிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# செந்தூர் எக்ஸ்பிரஸ் ரெயிலில் கழிவறை கதவில் அதிக இடைவெளி இருப்பதாக பயணிகள் குற்றச்சாட்டு

நெல்லை, அக். 6

திருச்செந்தூர்சென்னை இடையே தினமும் எக்ஸ்பிரஸ் ரெயில்கள் இருமார்க்கமாகவும் இயக்கப்பட்டு வருகின்றன. நேற்று முன்தினம் திருச்செந்தூரில் இருந்து சென்னைக்கு புறப்பட்ட செந்தூர் எக்ஸ்பிரஸ் ரெயிலின் கழிவறை கதவில் அதிக இடைவெளி இருப்பதாக கூறி பயணிகள் குற்றம்சாட்டி வீடியோ எடுத்து சமூக வலைதளத்தில் பதிவிட்டனர்.

அந்த வீடியோவில், "ரெயில் கழிவறை கதவில் அதிக இடை வெளி இருப்பதால் அதனை பயணிகள் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. பெண்கள் கழிவறைக்கு செல்லவே அச்சப்படுகின்றனர். எனவே கழிவறையை முழுமையாக மறைக்கும் வகையில் கதவு அமைக்க வேண்டும்" என்று தெரிவித்து இருந்தனர்.

இந்தவீடியோசமூகவலைதளங்களில்வைரலானது. இதுகுறித்து பயணிகள் கூறுகையில், "செந்தூர் எக்ஸ்பிரஸ்ரெயிலில்கழிவறைகதவுகளைமுறையாக அமைக்க வேண்டும். அப்போது தான் நீண்ட தூரம் பயணம் மேற்கொள்ளும் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டவர்கள் கழிவறைகளை அச்சமின்றி பயன்படுத்தும் நிலை ஏற்படும். எனவே ரெயில்வே நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து, பயணிகளின் பாதுகாப்பையும் தனியுரிமையையும் உறுதிசெய்யவேண்டும்"என்றுகேட்டுக்கொண்டனர்.



# மாணவனை கொன்றுவிட்டு சாமியார் வேடம்... மொட்டை அடித்து பதுங்கிய கள்ளக்காதலன் கைது



கோயம்பேடு, அக். 6

சென்னைகோயம்பேடு நியூகாலனி பகுதியைச் சேர்ந்தவர் பூவரசி (வயது 28). கணவரை பிரிந்து தனது 9 வயது மகன் தருணுடன் வசித்து வந்தார். தருண், அதே பகுதியில் உள்ள பள்ளியில் 4ம் வகுப்பு படித்து வந்தான். இதற்கிடையில் பூவரசிக்கு, தமிழ்ச்செல்வன் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டு, கள்ளக்காதலாக மாறியது. திருமணம் செய்து கொள்ளாமலே ஒரே வீட்டில் இருவரும் கணவன்மனைவி போல் வசித்து வந்தனர்.

கடந்த மாதம் கோயம்பேடு பஸ் நிலையத்துக்கு பூவரசியும், தமிழ்ச்செல்வனும் சென்றபோது, அங்கிருந்த பெண்கள் தமிழ்ச்செல்வனை ஆபாசமாக திட்டியதாகவும், அதை பூவரசி தட்டிக்கேட்கவில்லை எனவும் கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த தமிழ்ச்செல்வன், வீட்டுக்குச் சென்று அங்கிருந்த கள்ளக்காதலியின் மகன் தருணின் கழுத்தை நெரித்து கொலை செய்தார். பின்னர் செல்போன் மூலம் பூவரசியிடம் தகவல் தெரிவித்துவிட்டு தப்பிச் சென்றார். இதுகுறித்து கோயம்பேடு போலீசார் வழக்குப்பதிவு செய்து தமிழ்ச்செல்வனை தேடி வந்தனர்.

இந்தநிலையில் திருவண்ணாமலையில் தலைமறைவாக இருந்த அவரை தனிப்படை போலீசார் கைது செய்தனர். போலீசாரிடம் சிக்காமல் இருக்க தலையை மொட்டை அடித்துக்கொண்டு சாமியார் வேடத்தில் சுற்றித்திரிந்தது விசாரணையில் தெரியவந்தது.

# தாய் மாமன் தங்க மோதிரம் திட்டம் வெளி மாநிலத்தவருக்கு பொருந்துமா? சுகாதாரத்துறை வெளியிட்ட தகவல்



சென்னை, அக். 6

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கழனிவாசலை சேர்ந்தவர் உமா மகேஸ்வரி. இவர், கர்நாடக மாநிலம் மைசூரை சேர்ந்தவரை திருமணம் செய்துள்ளார். இரண்டாவது பிரசவத்திற்காக, கடந்த ஆறு மாதங்களாக, காரைக்குடியில் உள்ள தாய் வீட்டில் தங்கி, அருகில் உள்ள முத்துப்பட்டணம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ பரிசோதனை செய்து வந்தார்.

கடந்த செப்டம்பர் 17ந்தேதி, உமா மகேஸ்வரிக்கு, காரைக்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ஆண் குழந்தை பிறந்தது. இந்நிலையில், தமிழக அரசின், 'தாய் மாமன் தங்க மோதிரம்' திட்டத்தில், உமா மகேஸ்வரியின் குழந்தைக்கு தங்க மோதிரம் வழங்க, கடந்த, 1ந்தேதி, 'டோக்கன்' வழங்கப்பட்டது.

ஆனால், அவர் சமர்ப்பித்த ஆதார் அட்டையில், முகவரிமைசூர்எனகுறிப்பிட்டிருந்ததால்,கணினியில் பதிவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. எனவே, தாய் மாமன் தங்க மோதிரம் திட்டத்தில், உமா மகேஸ்வரிக்கு மோதிரம் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக, பொது சுகாதாரத்துறை அளித்துள்ள விளக்கத்தில், உமா மகேஸ்வரியின் ஆவணங்கள் அடிப்படையில், அவர் கர்நாடகா மாநிலத்தை சேர்ந்தவர் என்பது தெரிய வருகிறது. பிரசவத்திற்காக, தன் தாயின் இல்லத்திற்கு வந்தவர், காரைக்குடி அரசு தலைமை மருத்துவமனையில், செப்டம்பர் 17ந்தேதி, அறுவை சிகிச்சை வழியே குழந்தையை பெற்றேடுத்தார். உமா மகேஸ்வரிக்கு, அனைத்து மருத்துவ சிகிச்சைகளும், கட்டணமில்லாமல் வழங்கப்பட்டதுடன், பிரசவத்திற்கு பிந்தைய காலத்திலும், போதுமான மருத்துவ பராமரிப்பு வழங்கப்பட்டது. அவர், செப்டம்பர் 22ந்தேதி, மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார். அவர், 'தாய்மாமன் தங்க மோதிரத் திட்டத்தின்' கீழ் பயன் பெற இயலாது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாது வேடத்தில் கஞ்சா விற்பனையா? கிரிவலப்பாதையில் போலீசார் அதிரடி சோதனை



திருவண்ணாமலை, அக். 6

கஞ்சா விற்பனையில் சாதுக்கள் ஈடுபடுவதாக வந்த புகாரின்பேரில்திருவண்ணாமலைகிரிவலபாதையில் சாதுக்களிடம் போலீசார் அதிரடி சோதனை நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. மேலும் புதிதாக வரும் சாதுக்களை அப்புறப்படுத்தும் பணியும் தொடங்கியுள்ளதாக போலீசார் தெரிவித்தனர். கிரிவலப்பாதைஆன்மிக நகரமான திருவண்ணாமலையில் 14 கிலோ மீட்டர் கொண்ட கிரிவலப்பாதையில் ஆயிரக்கணக்கான சாதுக்கள் தங்கி கிரிவலம் வருகின்ற பக்தர்களிடம் யாசகம் பெற்று அங்கேயே வசித்து வருகின்றனர். ஒரு சிலர் சாது போர்வையில் கஞ்சா உள்ளிட்ட பல்வேறு போதை பொருட்களை உட்கொண்டு தகராறிலும் ஈடுபட்டுவருகின்றனர். கடந்தமாதம்கிரிவலப்பாதை முழுவதும்சாதுக்கள்கஞ்சாபயன்படுத்துகிறார்களா? என மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு உதயகுமார் உத்தரவின்பேரில்அதிரடி சோதனைநடத்தப்பட்டது. இந்த நிலையில் ஒரு சில சாதுக்கள் வெளிமாநிலங்களில் இருந்து வரும்போது அவர்கள் கஞ்சா கொண்டு வந்து கிரிவலப்பாதையில் அதனை பயன்படுத்துவதாகபுகார்கள்வந்தன. சோதனைஅதன் அடிப்படையில் நேற்று திருவண்ணாமலை மேற்கு போலீசார் கிரிவலப்பாதையில் உள்ள சிம்ம தீர்த்தகுளம் அருகே நடைபாதையில் வசித்து வரும் சாதுக்களிடம் அவர்கள் வைத்திருக்கும் பைகளில் கஞ்சா உள்ளிட்ட போதை வஸ்துக்கள் உள்ளனவா என போலீசார் சோதனை மேற்கொண்டனர். மேலும் அருகில் உள்ள காட்டுப்பகுதிக்குள் எவரேனும் உள்ளனரா? எனவும் ஆய்வு மேற்கொண்டனர். திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் தொடர்ந்து வசித்து வரும் சாதுக்களுக்கு வெளி மாநில சாதுக்களுடன் தொடர்பு உள்ளதாகவும், வெளிமாநிலங்களில் இருந்து அவர்கள் கொண்டு வரக்கூடிய கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களை இவர்கள் பயன்படுத்துவது மட்டுமின்றி விற்பனையில் ஈடுபடுவதாகவும். இதற்காக இந்த சோதனை நடைபெறுவதாகவும் போலீசார் தெரிவித்தனர். மேலும் புதிதாக கிரிவல பாதைக்கு வரக்கூடியசாதுக்களைஇங்கிருந்துஅப்புறப்படுத்தும் பணி தொடங்கியுள்ளதாகவும் கிரிவலப் பாதை முழுவதும் தொடர்ந்து இதுபோன்று சோதனை மற்றும்கண்காணிப்புநடைபெறும்எனவும்போலீசார் தெரிவித்தனர்.

# டிஎன்பிஎஸ்சி குரூப்4 தேர்வு அறிவிப்பு இன்று வெளியாகிறது




சென்னை, அக். 6

இந்த ஆண்டு குரூப் 4 தேர்வுக்கும் சுமார் 15 லட்சம் பேர் விண்ணப்பிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குரூப் 4 அறிவிப்பில் கூடுதல் பணியிடங்கள் அறிவிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளில் உள்ள காலிப்பணியிடங்கள் டிஎன்பிஎஸ்சி வாயிலாக நிரப்பபடுகிறது. நடப்பு ஆண்டுக்கான டிஎன்பிஎஸ்சி வருடாந்திர தேர்வு அட்டவணையில் இடம்பெற்றுள்ள 6 தேர்வுகளில் 5 தேர்வுகளுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு 3 தேர்வுகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில், ஆண்டு கால அட்டவணைப்படி குரூப்4 தேர்வுக்கான அறிவிப்பு நாளை வெளியாக உள்ளது. டிசம்பர் 20 ஆம் தேதி நடைபெறும் என தேர்வு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குரூப்4 தேர்வில், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர் (கிரேடு3), கிராம நிர்வாக அலுவலர், வரைவாளர், பில்கலெக்டர், வனக்காவலர் உள்ளிட்ட பதவிகள் இடம் பெறும். எஸ்எஸ்எல்சி தகுதி: குரூப் 4 தேர்வை பொருத்தவரையில் பெரும்பாலான பதவிகளுக்கு அடிப்படை கல்வித்தகுதி எஸ்எஸ்எல்சி தேர்ச்சி ஆகும்.

குரூப்4 தேர்வுக்கான அடிப்படை கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி என்றாலும் முதுகலை பட்டதாரிகளும், பட்டதாரிகளும்தான் அதிக எண்ணிக்கையில் விண்ணப்பிக்கிறார்கள் . கடந்த குரூப்4 தேர்வுக்கு 13.89 லட்சம் பேர் விண்ணப்பித்திருந்தனர். எனவே இந்த ஆண்டு குரூப் 4 தேர்வுக்கும் சுமார் 15 லட்சம் பேர் விண்ணப்பிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குரூப் 1, குரூப் 2 பணியிடங்களில் காலியிடங்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்ததாக தேர்வர்கள் அதிருப்தி தெரிவித்து இருந்தனர். எனவே, குரூப் 4 அறிவிப்பில் கூடுதல் பணியிடங்கள் அறிவிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

# விஜய் வருகையின்போது கோவை விமான நிலையத்தில் விழுந்து கிடந்த மர்ம 'டிரோன்' தீவிர விசாரணை



கோவை, அக். 6

கடந்த 30ந் தேதி மற்றும் நேற்று தாராபுரத்தில் பிரசாரம் மேற்கொள்ள செல்வதற்காக முதல்அமைச்சர் விஜய் சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை விமான நிலையத்துக்கு வந்தார். இதன் காரணமாக பாதுகாப்பு கருதி விமான நிலையத்தை சுற்றி உள்ள பகுதிகள் 'ரெட் ஜோன்' ஆக அறிவிக்கப்பட்டது. இந்த பகுதியில் டிரோன் பறக்க தடைசெய்துமாவட்டநிர்வாகமும்,மாநகரகாவல்துறையும் அறிவித்தது.

அத்துடன்தடையைமீறிடிரோன்பறக்கவிடப்படுகிறதா? என்பதை போலீசார் தீவிரமாக கண்காணித்து வந்தனர். இந்தநிலையில்கோவைவிமானநிலையத்தின்பின்புறத்தில் ஒரு டிரோன் விழுந்து கிடந்தது. அதை பறக்கவிட்டவர் யார்? என்று தெரியவில்லை. அதை பார்த்து விமான நிலைய அதிகாரிகள் மற்றும் மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் அதிர்ச்சி அடைந்தனர். பின்னர் அவர்கள் அந்த டிரோனை சோதனை செய்தனர். அதில் கேமராக்கள் எதுவும் இல்லை என்று கூறப்படுகிறது.

இதுகுறித்து பீளமேடு போலீசில் புகார்செய்யப்பட்டது. அத்துடன்அந்தடிரோன்போலீசிடம் ஒப்படைக்கப்பட்டது. போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இது தொடர்பாக போலீசார் கூறும்போது, அந்த டிரோன் சீனாவில் தயாரிக்கப்பட்டது ஆகும். டிரோன் பறக்க தடை இருக்கும்போது அதை பறக்கவிட்டவர் யார்? என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என்றனர்.

# அரசு நிலங்களின் குத்தகை கட்டணம் மாற்றி அமைக்க முடிவு



சென்னை, அக்.6

தமிழகத்தில் அரசு நிலங்களுக்கு வசூலிக்கப்படும் குத்தகை கட்டணங்களை, தற்போதைய சந்தை நிலவரத்துக்கு ஏற்ப மாற்றி அமைக்க வருவாய்த்துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

தமிழகத்தில் அரசுக்கு சொந்தமான நிலங்கள் கல்வி, மருத்துவம், விளையாட்டு உள்ளிட்ட பொது நோக்கங்களுக்காக தனிநபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த குத்தகை காலம் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் முதல் அதிகபட்சம் 30 ஆண்டுகள் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேல் நீண்டகால குத்தகை தேவைப்பட்டால், அரசு தனியாக ஆணை பிறப்பித்து அனுமதி வழங்குகிறது.

தற்போதைய நிலவரப்படி, தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சுமார் 2 ஆயிரம் முதல் 5 ஆயிரம் ஏக்கர் வரை அரசு நிலங்கள் குத்தகை அடிப்படையில் தனியார் பயன்பாட்டில் இருப்பதாக கூறப்படுகிறது. இந்த நிலங்களுக்கு மிகவும் குறைவான குத்தகை கட்டணமே வசூலிக்கப்பட்டு வருகிறது. சில நிலங்களுக்கு ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ.100 முதல் ரூ.1,000 வரை குத்தகை வசூலிக்கப்படுகிறது. தமிழக அரசின் நிதி நிலவரம் தொடர்பாக தயாரிக்கப்பட்ட வெள்ளை அறிக்கையின்போது, அரசு நிலங்களின் குத்தகை மூலம் கிடைக்கும் வருவாயிலும் பெரும் இழப்பு இருப்பது கண்டறியப்பட்டது. இதைத்தொடர்ந்து குத்தகை கட்டணங்களை மாற்றி அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்க தொடங்கியது.

இதுகுறித்து வருவாய்த்துறை உயரதிகாரி ஒருவர் கூறியதாவது: 'தமிழகத்தில் தற்போது வணிகமற்ற நோக்கங்களுக்காக வழங்கப்படும் நிலங்களுக்கு, நில மதிப்பில் ஆண்டுக்கு 7 சதவீதமும், வணிக நோக்கத்துக்காக வழங்கப்படும் நிலங்களுக்கு நில மதிப்பில் ஆண்டுக்கு 14 சதவீதமும் என்ற அடிப்படையில் குத்தகை கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால் பல நிலங்களுக்கு 50 அல்லது 60 ஆண்டுகளுக்கு முந்தைய நில மதிப்பின் அடிப்படையிலேயே குத்தகை கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இதனால் அரசுக்கு கிடைக்கவேண்டியவருவாயில்இழப்புஏற்படுகிறது.

இதையடுத்து குத்தகை கட்டணத்துக்கான சதவீதம் மற்றும் நில மதிப்பு ஆகியவற்றை தற்போதைய சூழலுக்கு ஏற்ப மாற்றி அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் அரசின் ஒப்புதலுடன் மேற்கொள்ளப்படும்.'

இவ்வாறு அவர் கூறினார்.

# இன்ஸ்டாகிராம் காதல்... பிளஸ்2 மாணவியை அடுத்தடுத்து பலாத்காரம் செய்த 4 பேர்... அதிர்ச்சி சம்பவம்



குமரி, அக். 6

குமரி மாவட்டம் வெள்ளிச்சந்தை போலீஸ் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியை சேர்ந்த 17 வயதுடைய மாணவி ஒருவர், பிளஸ்2 படித்து வருகிறார். இன்ஸ்டாகிராமில் பிரபலமான இவர் கடந்த மாதம் திடீரென மாயமானார். இதுகுறித்து அவரது பெற்றோர் வெள்ளிச்சந்தை போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தனர். இதற்கிடையே மாயமான மாணவி ஒரு வாரத்திற்கு பிறகு வீடு திரும்பினார். அவரிடம் பெற்றோர் விசாரணை நடத்திய போது 'பகீர்' தகவல்கள் அம்பலமானது.

அதாவது தன்னை நண்பர் ஒருவர் அழைத்து சென்று அறையில் அடைத்து வைத்து மற்றொரு நண்பருடன் சேர்ந்து பலாத்காரம் செய்ததாக கூறினார். இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த பெற்றோர் குளச்சல் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். மாணவியிடம் போலீசார் விசாரித்ததில் அதிர்ச்சிதகவல் வெளியானது. மாணவி முழு நேரமும் இன்ஸ்டாகிராமில் மூழ்கி கிடந்த நிலையில் இவருக்கும் தடிக்காரன்கோணம் பகுதியை சேர்ந்த அஜன் (வயது 20) என்ற வாலிபருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது.

இருவரும் இன்ஸ்டாகிராம் மூலம் காதலித்து வந்தனர். ஒரு கட்டத்தில் அஜன், ஆசை வார்த்தை கூறி பூங்கா, கடற்கரை என பல இடங்களுக்கு மாணவியை அழைத்துச் சென்றார். மாணவியை தன்வசப்படுத்திய காதலன், ஒருநாள் விடுதியில் அறை எடுத்து அவரை பலவந்தப்படுத்தி பலாத்காரம் செய்துள்ளார். அந்த காட்சியைவீடியோவாகவும்பதிவுசெய்துகொண்டார். பின்னர் அஜன் அந்த ஆபாச வீடியோவை காட்டி மீண்டும் தன்னுடன் தனிமையில் வரும்படி மிரட்டியுள்ளார். இதற்கு மாணவி மறுத்ததால், ஆபாச வீடியோவை இன்ஸ்டா கிராமில் வெளியிட்டதாக தெரிகிறது.

இதனால் வேதனை அடைந்த மாணவி, தனது உறவு முறையான வேம்பனூரை சேர்ந்த விவேக் (32) என்பவரிடம் நடந்த சம்பவங்களை கூறி அழுதார். மாணவியின்நிலைமையை அறிந்து கொண்ட விவேக் அவருக்கு உதவுவது போல் நடித்தார். விவேக்கும், மாணவியை பலாத்காரம் செய்ததுடன் இந்த விவரத்தை தனது நண்பரான பரப்புவிளையை சேர்ந்த தினேஷ் (29) என்பவரிடம் கெத்தாக கூறியுள்ளார்.

உடனே மாணவியின் பலவீனத்தை உணர்ந்த தினேஷ், 'உனது பிரச்சினைகளை நான் தீர்த்து வைக்கிறேன். என்னுடன் வா' என மாணவியை அழைத்துள்ளார். இதனை நம்பிய மாணவி வீட்டில் இருந்து வெளியேறி தினேசுடன் சென்றுள்ளார். தினேஷ் மாணவியை அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள வீட்டில் ஒரு வாரம் அடைத்து வைத்து மது வாங்கி கொடுத்து மிரட்டி அனுபவித்தார். மேலும் தனது நண்பரான நாகர்கோவிலை சேர்ந்த ஆன்றோ ஜெரிஷ் (24) என்பவருக்கும் மாணவியை விருந்தாக்கினார்.

ஒருவாரம் அவர்களிடம் சித்ரவதையை அனுபவித்த மாணவி அங்கிருந்து தப்பி வீடு வந்து சேர்ந்ததாக கதறி அழுதுள்ளார். இதனையடுத்து மாணவியை போலீசார் மருத்துவ பரிசோதனைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதுதொடர்பாக மாணவியின் காதலன் அஜன், விவேக் மற்றும் தினேஷ், ஆன்றோ ஜெரிஷ் ஆகியோர் மீது போக்சோ உள்பட 6 பிரிவுகளில் வழக்குப்பதிந்து 4 பேரையும் அதிரடியாக கைது செய்தனர். பின்னர் கோர்ட்டில் ஆஜர்படுத்திசிறையில் அடைத்தனர். இன்ஸ்டாகிராம் காதலால் பிளஸ்2 மாணவி வாழ்க்கை சீரழிந்த சம்பவம் குமரியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# கடந்த 10 ஆண்டுகளில் லஞ்சம் வாங்கிய அரசு ஊழியர்கள், அதிகாரிகள் 889 பேருக்கு சிறை



சென்னை, அக். 6

தமிழகத்தில், லஞ்சம் வாங்கியது தொடர்பான வழக்குகளில், கடந்த, 10 ஆண்டுகளில், அரசு அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், 889 பேருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. லஞ்ச ஒழிப்பு போலீசார், மாநிலம் முழுவதும் அரசு அலுவலகங்களை ரகசியமாக கண்காணித்தும், புகார்களின் அடிப்படையிலும் சட்டரீதியாக நடவடிக்கை எடுத்து வருகின்றனர். திடீர் சோதனைகள் நடத்தி கணக்கில் வராத லஞ்சப் பணத்தை பறிமுதல் செய்கின்றனர்.

அந்த வகையில், கடந்த மாதம் மட்டும், ரூ.2.15 கோடியை பறிமுதல் செய்துள்ளனர்.

இவற்றில், 1.87 கோடி ரூபாயை, அரசு அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், 'கூகுள் பே' வாயிலாக பெற்றுள்ளனர். லஞ்ச வழக்குகளில், நீதிமன்றங்களில் தகுந்த ஆவணங்கள் மற்றும் சாட்சிகளுடன், போலீசார் குற்றத்தை நிரூபித்து, குற்றம் புரிந்தவர்களுக்கு சிறை தண்டனை பெற்று தருகின்றனர்.

நடப்பு ஆண்டில் இதுவரை, 73 பேருக்கும், கடந்த, 10 ஆண்டுகளில், அரசு ஊழியர் கள் மற்றும் அதிகாரிகள் 889 பேருக்கம் சிறை தண்டனை பெற்றுத் தந்துள்ளனர். லஞ்ச இதுகுறித்து, ஒழிப்பு போலீசார் கூறுகையில், 'அதிகபட்ச மாக, 2024 2025 ஆண்டில், அரசு அதிகாரிகள், ஊழியர்கள் என, 126 பேருக்கு சிறை தண்டனை பெற்றுத்தரப்பட்டது. கொரோனா பரவல் காரணமாக, 2020 2021ல் 41 பேர், 2021 2022ல், 51 பேருக்கு மட்டுமே சிறை தண்டனை பெற்றுத்தர முடிந்தது என்று கூறினர்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

06.10.2026

# அண்ணா சாலையில் பைக் சாகசம் மேலும் 5 பேர் கைது

சென்னை, அக். 6

சென்னை நகரில் சனிக்கிழமை இரவு என்றாலே இளைஞர்கள் மோட்டார் சைக்கிள்சாகசத்தில்ஈடுபடுவதுவழக்கமாக இருந்தது. போலீசார் எடுத்த கடும் நடவடிக்கையால் மோட்டார் சைக்கிள் சாகசத்தில் ஈடுபட்டவர்கள் கடந்த சில மாதங்களாக அமைதி காத்தனர்.

இந்தநிலையில், சனிக்கிழமையன்று இரவு தென் சென்னையில் பல பகுதிகளில் இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் சாகசத்தில் ஈடுபட்டனர். சென்னை அண்ணா சாலை, நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம் பகுதியில் இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் அதிவேகமாக சென்றனர். இதுபோல் மோட்டார்சைக்கிள் சாகத்தில் ஈடுபட்டவர்களை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கும் பணியில் போக்குவரத்துபோலீசார்ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில், சென்னை அண்ணா சாலையில் பைக் சாகசத்தில் ஈடுபட்ட மேலும்5பேர்கைது செய்யப்பட்டுள்ளனர். வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த வெங்கடேஷ், விக்னேஷ் குமார், அம்பத்தூரைச் சேர்ந்த சந்தோஷ்,



வடபழனியை சேர்ந்த தர்ஷன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுவரை 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 5 மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மேலும் பதிவு எண் இல்லாமல் ஓட்டிய 56 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் போலீசார் தெரிவித்துள்ளனர். போக்குவரத்து விதிமுறைகளை மீறி மோட்டார் சைக்கிள் சாகசம் என்ற பெயரிலும், பைக் ரேஸ் என்ற பெயரிலும் அதிவேக மாக மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் போக்குவரத்து போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# கோவை வால்பாறையில் காரை வழிமறித்து அச்சுறுத்திய காட்டு யானை

கோவை, அக். 6

கோவை மாவட்டம் வால்பாறை மலைப்பாதையில் திடீரென காரை வழிமறித்து அச்சுறுத்திய காட்டு யானையிடம் இருந்து, ஓட்டுநர் ஒருவர் சற்றும் பதற்றமடையாமல் காரை பின்னோக்கி இயக்கி சாதுரியமாக தப்பியுள்ளார்.



கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் இருந்து வால்பாறை செல்லும்மலைப்பாதையில்பயணிகள் சிலர் காரில் சென்று கொண்டிருந்தனர். அப்போது, அடர்ந்த வனப்பகுதியிலிருந்து வெளியேறிய ஒற்றைக் காட்டு யானை ஒன்று திடீரென சாலையின் நடுவே வந்து நின்றது. காரைக் கண்டதும் ஆக்ரோஷமடைந்த அந்த யானை, காரைநோக்கிவேகமாகமுன்னேறி வந்து அச்சுறுத்தத் தொடங்கியது. இதனால் காரில் இருந்த பயணிகள் கடும் அதிர்ச்சியடைந்தனர்.

யானை மிக அருகில் வந்த நிலையிலும், காரை ஓட்டி வந்த ஓட்டுநர் சற்றும் பதற்றமடையவில்லை. யானையை மேலும் கோபப்படுத்தாமல் இருக்க, அவர் காரின் ஹாரனை ஒலிக்காமலும், வாகனத்தை முன்னோக்கி செலுத்தாமலும் நிதானமாக காத்திருந்தார்.

தொடர்ந்து, காரை மிக லாவகமாக பின்னோக்கி இயக்கினார். யானை முன்னேறி வர வர, அதற்கு இணையாக காரையும் அவர் பின்னோக்கி நகர்த்திக்கொண்டே சென்றார். ஒரு கட்டத்தில் கார் பாதுகாப்பான தூரத்திற்கு சென்றதை அடுத்து, யானை அங்கிருந்து நகர்ந்து மீண்டும் வனப்பகுதிக்குள் சென்றது.

மலைப்பாதைகளில் வனவிலங்குகள் குறுக்கிடும்போது பொதுமக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு இந்த ஓட்டுநரின் பொறுமையான செயல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. ஆபத்தான சூழலிலும் பதற்றப்படாமல், சாதுரியமாக காரை பின்னோக்கிஇயக்கிபயணிகளின்உயிரைக் காத்த ஓட்டுநரின் இந்த செயலுக்கு சமூக வலைதளங்களில் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

# ஆனைமலையாறு நல்லாறு பாசன திட்டம்: தமிழக அமைச்சர்கள் குழுவின் கேரள பயணம் ஒத்திவைப்பு



சென்னை, அக்.6

ஆனைமலையாறு நல்லாறு திட்டம் தொடர்பாக விவாதிப்பதற்காக கேரளா செல்ல இருந்த தமிழக அமைச்சர்கள் குழுவின் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கேரளாவில்உற்பத்தியாகி வீணாகஅரபிக்கடலுக்கு செல்லும் ஆனைமலையாறு நீரை, நல்லாறு வழியாக திருப்பி தமிழ்நாட்டில் உள்ள திருமூர்த்தி அணைக்குக்கொண்டு வருவதே ஆனைமலையாறு நல்லாறு திட்டமாகும்.

கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் பாசன வசதிக்காக ஆனைமலையாறு நல்லாறு திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்பது தமிழக விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையாக உள்ளது.

இந்த திட்டத்தை செயல்படுத்துவது குறித்து கேரள அரசுடன் விவாதிப்பதற்காக தமிழக அமைச்சர்கள் குழு இன்று கேரளாவுக்கு செல்ல திட்டமிட்டிருந்தது.

இந்த குழுவில் தமிழக நீர்வளத்துறை அமைச்சர் ஆனந்த், வருவாய்த்துறை அமைச்சர் செங்கோட்டையன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அருண்ராஜ், சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ் குமார் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்த குழுவினர் கேரள முதல் மந்திரி விடி சதீசன் மற்றும் அம்மாநில நீர்ப்பாசனத்துறை மந்திரியை சந்திக்க இருந்தனர்.

இந்நிலையில், ஆனைமலையாறு நல்லாறு பாசன திட்டம் தொடர்பாக ஆலோசனை நடத்த தமிழக அமைச்சர்கள் குழுவின் மேற்கொள்ள இருந்த கேரள பயணம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தேர்தல்நடத்தைவிதிமுறைகள்அமலில்உள்ளதால் அமைச்சர்கள் குழுவினர் கேரள பயணம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (06.10.2026)

மேஷம்: பணிகளில் வேகம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் அவசர முடிவுகளைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் ஆதரவு கிடைக்கும்.

ரிஷபம்: பொருளாதார விஷயங்களில் கவனம் தேவை. எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். உடல் மற்றும் மன ஓய்வுக்கு நேரம் ஒதுக்குங்கள்.

மிதுனம்: நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களால் நல்ல வாய்ப்புகள் வரலாம். முக்கிய பேச்சுவார்த்தைகளில் பொறுமை கைகொடுக்கும்.

கடகம்: குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கலாம். பழைய பிரச்சினைக்கு தீர்வு காணும் வாய்ப்பு உள்ளது. செலவுகளில் கட்டுப்பாடு நல்லது.

சிம்மம்: உங்கள் திறமையை வெளிப்படுத்தும் சூழல் அமையும். வேலை தொடர்பான பாராட்டு கிடைக்கலாம். தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

கன்னி: திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும். பண விஷயங்களில் தெளிவான முடிவுகள் எடுக்கலாம். உறவுகளில் இனிமையான மாற்றம் ஏற்படலாம்.

துலாம்: புதிய தொடர்புகள் பயனுள்ளதாக அமையலாம். தொழில் அல்லது வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டிய நாள். செலவுகளை கண்காணிக்கவும்.

விருச்சிகம்: தடைப்பட்டிருந்த காரியம் மீண்டும் தொடங்கலாம். பணவரவு தொடர்பான நம்பிக்கை ஏற்படும். உணர்ச்சிவசப்பட்ட முடிவுகளைத் தவிர்க்கவும்.

தனுசு: பயணம் அல்லது வெளியிடத் தொடர்பான வேலைகள் அமையலாம். கற்றல் மற்றும் புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

மகரம்: பொறுப்புகள் அதிகரித்தாலும் அவற்றைதிறம்படசமாளிக்கமுடியும். பணியில் முன்னேற்றத்திற்கான வாய்ப்பு கிடைக்கலாம். உடல்நலத்தில் கவனம் தேவை.

கும்பம்: புதிய சிந்தனைகள் செயல்படுத்த ஏற்ற நாள். நண்பர்கள் மூலம் ஆதரவு கிடைக்கலாம். பணம் கொடுக்கல் வாங்கலில் கவனம் அவசியம்.

மீனம்: மனதில் இருந்த குழப்பங்கள் குறையலாம். குடும்ப உறவுகளில் நெருக்கம் அதிகரிக்கும். நீண்டநாள் எதிர்பார்த்த செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

# உளுந்தூர்பேட்டை அருகே ஆம்னி பஸ் கவிழ்ந்து விபத்து: 14 பயணிகள் காயம்

கள்ளக்குறிச்சி, அக். 6

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டைஅருகேதனியார் சொகுசு பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில்14பயணிகள் காயம் அடைந்தனர்.



சென்னையிலிருந்து சுமார் 36 பயணிகளுடன் தனியார் சொகுசு பஸ் ஒன்று மதுரைக்கு நேற்று நள்ளிரவு புறப்பட்டது. பஸ்சை திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் பகுதியை சேர்ந்த பா.பாலமுருகன் (30) ஓட்டிச் சென்றார். இந்த பஸ் இன்று அதிகாலை 5 மணிக்கு கள்ளக்குறிச்சி மாவட்டம் ,உளுந்தூர்பேட்டை அருகிலுள்ள பாதூர் பஸ் ஸ்டாப் அருகே வந்த போது,

திடீரனெ சாலையோரத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் டிரைவர்பாலமுருகன், பஸ்கிளீனர்பைசல் (18) உள்பட 14 பேர் காயம் அடைந்தனர். விபத்து குறித்து தகவலறிந்த திருநாவலூர் போலீசாரும் , உளுந்தூர்பேட்டை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய வீரர்களும் நிகழ்விடத்திற்கு சென்று , விபத்தில் காயமடைந்தவர்களை மீட்டனர்.

தொடர்ந்து அனைவரும் சிகிச்சைக்காக உளுந்தூர் பேட்டை அரசு ஆஸ்பத்தியில் அனுமதிக்கப்பட்டனர். மேலும் விபத்து குறித்து திருநாவலூர் போலீசார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜான்வி கபூர் நான் உங்களுடன் நிற்கிறேன், வலிமையாக இருங்கள் நடிகை குஷ்பு



"ஒரு பெண் டிஜிட்டல் முறையில் அவமதிக்கப்படும்போது, மற்றொரு பெண்ணாக நான் அமைதியாக இருக்க மாட்டேன், ஏஐ மூலம் உருவாக்கப்படும் இதுபோன்ற மார்பிங் வீடியோக்களை வெளியிடுவது வெட்கக்கேடானது என குஷ்பு பதிவிட்டுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால், பிரபல நடிகைகளின் முகங்களை பயன்படுத்தி போலி வீடியோக்கள் மற்றும் புகைப்படங்கள் உருவாக்கப்படும் சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. நடிகைகள் ராஷ்மிகா மந்தனா, கத்ரினா கைப், மிருணாள் தாக்கூர், பிரீத்தி ஜிந்தா, தபு உள்ளிட்ட பலரின் முகங்களை பயன்படுத்தி டீப்பேக் (Deepfake) உள்ளடக்கங்கள் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டுள்ளன. இதனால் அவர்களின் ஆள்மை உரிமையும், நற்பெயரும் பாதிக்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. டீப்ஃபேக் மற்றும் டிஜிட்டல் ஆள்மாறாட்டத்திற்கு எதிராக ஏற்கனவே பல பிரபலங்கள் நீதிமன்றத்தை நாடியுள்ள நிலையில், அந்த வரிசையில் பாலிவுட் நடிகை ஜான்வி கபூரும் இணைந்துள்ளார். இதற்கு, நடிகர் ஜூனியர் என்.டி.ஆர்., சிரஞ்சீவி உள்ளிட்டோர் கடும் கண்டனத்தை தெரிவித்தனர். அந்த வகையில், நடிகையும், பாஜக பிரமுகருமான குஷ்பு நடிகை ஜான்வி கபூருக்கு ஆதரவாக பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள பதிவில், "ஒரு பெண் டிஜிட்டல் முறையில் அவமதிக்கப்படும்போது, மற்றொரு பெண்ணாக நான் அமைதியாக இருக்க மாட்டேன், ஏஐ மூலம் உருவாக்கப்படும் இதுபோன்ற மார்பிங் வீடியோக்கள் நகைச்சுவையோ, பொழுதுபோக்கோ அல்ல, இது கொடூரமானதும், துஷ்பிரயோகமானதும், மிகவும் வெட்கக்கேடானதுமாகும். இதை உருவாக்குபவர்கள், தெரிந்தே பகிர்பவர்கள் மற்றும் திட்டமிட்டு பரப்புபவர்கள் சட்டப்படி பொறுப்பேற்க வேண்டும், பெண்களுக்கு எதிரான ஆயுதமாக ஏஐ ஒருபோதும் பயன்படுத்தப்படக்கூடாது, ஜான்வி கபூர் நான் உங்களுடன் நிற்கிறேன், வலிமையாக இருங்கள்." என அதில் தெரிவித்துள்ளார்.

# "எனது பேச்சு தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது" சஞ்சய் தத் விளக்கம்



பாலிவுட் நடிகர் சஞ்சய் தத், நடிகர் சேகர் சுமன் தொகுத்து வழங்கும் 'சேகர் டுநைட்' நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது, இந்தியாவில் தற்போது அமைதி இல்லைஎனதெரிவித்தகருத்துசமூகவலைத்தளங்களில்சர்ச்சையைஏற்படுத்தியது. இதையடுத்து, தனது பேச்சு குறித்து சஞ்சய் தத் விளக்கம் அளித்துள்ளார்.

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு ஒளிபரப்பான நிகழ்ச்சியில் சஞ்சய் தத், நாட்டின் தற்போதைய நிலை குறித்து பேசினார். அப்போது, "இந்த நாட்டின் மக்கள் மிகவும் அன்பானவர்கள். இங்கு அமைதி நிலவ வேண்டும். ஆனால், தற்போது நமது நாட்டில் அந்த அமைதியை என்னால் உணர முடியவில்லை. இந்தியர்கள் பரந்த மனம் கொண்டவர்கள், விருந்தோம்பலில் சிறந்தவர்கள். நாம் நிறைய கொடுத்திருக்கிறோம். தொடர்ந்து அப்படியே இருக்க வேண்டும்" என்று அவர் கூறியிருந்தார். சஞ்சய் தத்தின் இந்த பேச்சு சமூக வலைத்தளங்களில் சர்ச்சையை ஏற்படுத்தின.

இந்நிலையில், தனது எக்ஸ் பக்கத்தில் அதற்கு விளக்கம் அளித்த சஞ்சய் தத், எந்தவொரு தனிநபர், சமூகத்தினர் அல்லது நிறுவனத்தின் உணர்வுகளையும் புண்படுத்தவோ, அவமதிக்கவோ தனது நோக்கம் இல்லை. நிகழ்ச்சியில் பேசியவை முன்கூட்டியே திட்டமிடப்பட்ட, நகைச்சுவை மற்றும் இலகுவான உரையாடலின் ஒரு பகுதியாக இருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், 'முன்னா பாய்' திரைப்படங்களில் இடம்பெற்ற நகைச்சுவை மற்றும் நையாண்டி, குறிப்பாக 'காந்திகிரி' கருத்தை அடிப்படையாகக் கொண்டே தனது பேச்சு அமைந்திருந்ததாகவும், அதன் மூலம் அன்பு, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை வலியுறுத்துவதே நோக்கம் என்றும் சஞ்சய் தத் விளக்கம் அளித்துள்ளார். தனது பேச்சு கூறப்பட்ட சூழலில் இருந்து விலகி வேறு விதமாகப் புரிந்துகொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சென்சார் சிக்கலை கடந்து வரும் '418' படம்... மிரட்டும் டிரெய்லர் வெளியீடு

ஹாரர் த்ரில்லர் கதைக்களத்தில் உருவாகியுள்ள '418' திரைப்படம், 15 ஆண்டுகளாக பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ள மருத்துவக் கல்லூரியின் 'ரூம் நம்பர். 418'ஐ மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அந்த அறையைச் சுற்றி நடைபெறும் மர்மமான மற்றும் பயமுறுத்தும் சம்பவங்களே படத்தின் முக்கியக் கதைக்களமாக அமைந்துள்ளன. நகைச்சுவை கலந்த ஹாரர் திரைப்படங்களுக்கு மத்தியில், '418' ஒரு சீரியஸ் ஹாரர் த்ரில்லராக உருவாகியுள்ளதாக படக்குழு தெரிவித்துள்ளது. '418' திரைப்படம் முதலில் ஜூலை 31ம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்திருந்தது. ஆனால், மத்திய திரைப்பட தணிக்கைக் குழுவின் (CBFC) சான்றிதழ் பெறுவதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக படத்தின் வெளியீடு தள்ளிப்போனது. படத்தில் அதிகப்படியான ஹாரர் அம்சங்கள் இடம்பெற்றிருப்பதாக சென்சார் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதாக கூறப்பட்டது. இதனால், படம் 'ஏ' சான்றிதழுடன் வெளியாகும் சூழல் ஏற்பட்டது. இது படத்தின் மீதான எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்துள்ளது. இயக்குநர் பிரசாந்த் நீலிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிய கீர்த்தன் நடகௌடா, '418' திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். இப்படம் தமிழ், தெலுங்கு மற்றும் கன்னடம் ஆகிய மொழிகளில் உருவாகியுள்ளது.

'418' திரைப்படம் வருகிற 23ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இந்நிலையில், '418' திரைப்படத்தின் அதிகாரப்பூர்வ டிரெய்லர் தற்போது வெளியாகியுள்ளது. திகிலூட்டும் காட்சிகளுடன் வெளியாகியுள்ள டிரெய்லர் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது.

# "நானும் 3 முறை 90களில் அவுட் ஆனேன்" தன் கதையை சொல்லி ரோஹித்துக்காக வருந்திய கவாஸ்கர்




வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான 3வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியில் இந்திய அணியின் கேப்டன் ரோஹித் சர்மா 92 ரன்களில் ஆட்டமிழந்தார். சதத்தை நெருங்கிய நிலையில் அவர் வெளியேறியது ரசிகர்களுக்கு ஏமாற்றமாக அமைந்தது.

இந்த நிலையில், ரோஹித் சர்மா 92 ரன்களில் ஆட்டமிழந்தது குறித்து இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் சுனில் கவாஸ்கர் தனது கருத்தை தெரிவித்துள்ளார்.

"92 ரன்களில் ஆட்டமிழந்தது ஏமாற்றம்"

இதுகுறித்து சுனில் கவாஸ்கர் கூறியதாவது:

"ரோஹித் 92 ரன்களில் ஆட்டமிழந்தது எனக்கு ஏமாற்றமளித்தது. 2027ம் ஆண்டு ஒருநாள் உலகக்கோப்பை தொடருக்குப் பிறகு அவர் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறலாம்.

அவர் கிரிக்கெட்டுக்கு விடைபெறும் நேரத்தில், அவரது வயதை விட அதிக எண்ணிக்கையில் ஒருநாள் சதங்கள் இருக்க வேண்டும் என்று நான் தனிப்பட்ட முறையில் விரும்புகிறேன்.

3வது போட்டியில் அவர் சதம் அடித்திருந்தால், தனது 36வது சதத்தை பதிவு செய்வதன் மூலம் அந்த சாதனையை நோக்கி மேலும் நெருக்கமாக சென்றிருப்பார்."

என்று கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், ஒரு வீரர் ஓய்வு பெறும்போது, அவரது வயதை விட சதங்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது சிறப்பான விஷயம் என்று கூறினார்.

" எனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையின் கடைசி ஆண்டில், எனது வயதிற்கு இணையான எண்ணிக்கையில் டெஸ்ட் சதங்களை அடிக்க வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் 3 முறை 90களில் ஆட்டமிழந்தேன்.

அந்த சதங்களை அடித்திருந்தால், நான் ஓய்வு பெற்ற 38 வயதிற்கு இணையான எண்ணிக்கையில் சதங்களை பெற்றிருப்பேன்" என்றும் கவாஸ்கர் கூறினார்.

# சீனா ஓபன் டென்னிஸ்: ஒசாகா, மிர்ரா ஆண்ட்ரீவா அசத்தல்... 4வது சுற்றுக்கு முன்னேற்றம்



சா"னா ஓபன் டென்னிஸ் தொடரில் 4வது சுற்றுக்கு மிர்ரா ஆண்ட்ரீவா, நவோமி ஒசாகா முன்னேறியுள்ளனர். சீனா ஓபன் டென்னிஸ் தொடர் சீனதலைநகர் பீஜிங்கில் நடைபெற்று வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் முன்னணி வீராங்கனைகள் அடுத்தடுத்த சுற்றுகளுக்கு முன்னேறி வருகின்றனர். பெண்கள் ஒற்றையர் பிரிவு 3வது சுற்றில் ஜப்பானின் நவோமி ஒசாகா, செக் குடியரசின் சாரா பெஜ்லெக்கை எதிர்கொண்டார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய ஒசாகா, 76 (74), 64 என்ற நேர் செட்களில் சாரா பெஜ்லெக்கை வீழ்த்தினார். இதன் மூலம் நவோமி ஒசாகா சீனா ஓபன் தொடரின் 4வது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு 3வது சுற்று ஆட்டத்தில் ரஷியாவின் மிர்ரா ஆண்ட்ரீவா, உஸ்பெகிஸ்தானின் பொலினா குடர்மெடோவாவை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஆண்ட்ரீவா, 64, 61 என்ற நேர் செட்களில் பொலினா குடர்மெடோவாவை வீழ்த்தினார். இதன் மூலம் மிர்ரா ஆண்ட்ரீவாவும் 4வது சுற்றுக்கு தகுதி பெற்றார்

# சீன ஓபன் டென்னிசில் வீறுநடை: நடாலின் சாதனையை முறியடித்த ஜோகோவிச்



ஒரு தொடரில் தோல்வியே சந்திக்காமல் அதிக வெற்றிகளை பெற்றவர் என்ற ரபெல் நடாலின் சாதனையை ஜோகோவிச் முறியடித்துள்ளார்.

சீனஓபன்சர்வதேசடென்னிஸ்போட்டி பீஜிங்கில்நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த ஒற்றையர் காலிறுதியில் ஒலிம்பிக் சாம்பியனும், முன்னாள் நம்பர் ஒன் வீரருமான நோவக் ஜோகோவிச் (செர்பியா) சரிவை சமாளித்து 46, 64, 64 என்ற செட் கணக்கில் அமெரிக்க ஓபன் சாம்பியனான அலெக்சாண்டர் ஸ்வெரேவை (ஜெர்மனி) தோற்கடித்து அரையிறுதிக்கு முன்னேறினார். ஜோகோவிச் அரையிறுதியில் ரஷியாவின் டேனில் மெட்விடேவை சந்திக்கிறார்.

சீன ஓபன் டென்னிசில் 2015ம் ஆண்டு முதல் முறையாக ஆடிய ஜோகோவிச் இதுவரை 6 முறை மகுடம் சூடியுள்ளார். இதுவரை ஒரு ஆட்டத்தில் கூட தோற்றதில்லை. தொடர்ந்து 32 ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ளார்.

இதன் மூலம் 'ஓபன் எரா' வரலாற்றில் (1968ம் ஆண்டில் இருந்து) ஒரு தொடரில் தோல்வியே சந்திக்காமல் அதிக வெற்றிகளை பெற்றவரான ஸ்பெயின் முன்னாள் வீரர் ரபெல் நடாலின் சாதனையை (பிரெஞ்சு ஓபனில் முதல் தோல்விக்கு முன்பு தொடர்ந்து 31 ஆட்டங்களில் வென்றிருந்தார்) ஜோகோவிச் முறியடித்துள்ளார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.